1972 சனவரி 28]

இராதாபுரம் துணை வட்டம்

* **80 வினா.—திரு. டி. கணபதி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தைத் தனி வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு

* **81 வினா—திரு. ந. சோமசுந்தரம்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கோயில், மடம் இவைகளுக்குச் சொந்தமான நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 58/1961), 2, 73-வது பிரிவுகள், பொதுத் தன்மை வாய்ந்த சமயப் பொறுப்புக் கழகங்களாலும், பொதுத் தன்மை வாய்ந்த ஓர் அறக்கட்டளை அல்லது கல்வி நிறுவனத்தாலும் வைத்திருக்கப்படுகிற நிலங்களுக்கு மேற்படிச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துவதிலிருந்து விலக்கு அளிக்கின்றன.

மேற்படிச் சட்டத்தில் அடங்கியுள்ள பல்வேறு விலக்குகள் தொடர்ந்து நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக, சட்டமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களைக் கொண்ட இணைக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்தக் குழு தன் பணியை எப்பொழுது தொடங்கி, எவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தப் பரிசீலனையை முடிக்கும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்: தலைவரவர்களே, சமீபத்தில் அந்தக் குழு கூடி மனை நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விலக்கு அளித்திருப்பதை நீக்குவது என்று தீர்மானித்திருக்கிறது.

திரு ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, கோயில், மடங்களுக்கு உள்ள சாகுபடி நிலங்கள் முறையாகச் சாகுபடி செய்யப்படுவதில்லை. சாகுபடியாளரிடமிருந்து சரியாக வரவு செலவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, கோயிலுக்கும்,

[1972 சனவரி 28

மடத்திற்கும் சொந்தமான நிலங்களை அரசு நடத்த, நஷ்ட ஈட்டை கோயில், மடங்களுக்கு வழங்கி, பிறகு உழவர்களுக்கு நிலங்களை வழங்கி, சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது பெரிய கொள்கைப் பிரச்னை. இந்தக் குழு மீண்டும் கூடி இதைப் பற்றி ஆராயும் என்று முடிவு செய்திருக்கிறோம். இந்தியா முழுவதும் இதைப்பற்றிப் பரிசீலிக்க முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி முடிவு எடுப்பதாக இந்திய அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, தமிழகத்தில் கோயில், மடங்களுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் இருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதில் அங்கம் வகிக்கக்கூடியவர்களில் சட்டப்பேரவை, மேலவை அங்கத்தினர்கள் யார் யார் இருக்கிறார்கள்? அதில் தெய்வ பக்தி உள்ளவர்கள் இருக்கிறார்களா ? அல்லது தெய்வ பக்தி இல்லாதவர்களாக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் அதில் அங்கம் வகிக்கவில்லை என்றாலும் அவர்களது கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, எல்லோரும் தெய்வபக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். யாரும் நாத்திகர்கள் இருப்பதாக நான் அறியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திலிருந்து நமது மாநில அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறார்களா ? அப்படியிருந்தால் அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இவைகளைப் பற்றி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை.

Financial Director in Tamil Nadu Industrial Development Corporation

* 82 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that proposals have been sent to the Central Government for the posting of a Financial Director for the Tamil Nadu Industrial Development Corporation Limited in 1971; and